**நாள் 12.02.2025**

**OS No. 3/2020**

**வா.சா.1 திரு. சண்முகம்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நீங்கள் நிரந்தரமாக குடியிருந்து வருவது சென்னையில் என்றால் இல்லை. இலத்தூரில் தான் குடியிருந்து வருகிறேன். சென்னையில் நீங்கள் பேராசிரியராக பணிபுரிந்தீர்கள் என்றால் ஆமாம். கொஞ்ச நாட்கள் பணிபுரிந்தேன். பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டீர்களா என்றால் இல்லை. எனது பெற்றோருக்கு உடல்நிலை சரியில்லாததால், பணியை நிறுத்தி வைத்துள்ளேன். இதே பிரதிவாதிகளுக்கு எதிராக, இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.49/2013 வழக்கு தாக்கல் செய்திருந்தீர்கள் என்றால் ஆமாம். மேற்படி வழக்கில் தாக்கல் செய்த வழக்குரையை நீங்கள் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்துள்ளீர்கள், அந்த வழக்கில் பிரதிவாதி பெயர் ராணி என்பதை இந்து ராணி என்று சீர்திருத்தம் செய்த வழக்குரையை தாக்கல் செய்யவில்லை என்றும், அது தற்போது உங்களிடம் காண்பிக்கப்படுவது தான் என்றால் சரிதான். **(மேற்படி அசல் வழக்கு எண். 49/2013 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சீர்திருத்தல்**

**வழக்குரை நகல் பி.வா.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி அசல் வழக்கு எண். 49/2013 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மீது மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. இந்த வழக்கு சொத்தின் அனுபவத்தை கேட்டு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ஆமாம். சுவாதீனம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன்.

2. மேற்படி அசல் வழக்கு எண். 49/2013-இல் முருகன் மகன் அழகு முத்து என்பவரை சாட்சியாக விசாரணை செய்தீர்கள் என்றால் ஆமாம். அவர் தற்போது இறந்துவிட்டார். மேற்படி அசல் வழக்கு எண். 49/13 முருகன் மகன் அழகு முத்து என்பவர் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலம் மற்றும் அவரது குறுக்கு விசாரணை சாட்சியம் சான்றிட்ட நகல் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. சாட்சி அதனை பார்வையிட்டு சரிதான் என்று கூறினார். (**மேற்படி முருகன் மகன் அழகு முத்து என்பவர் அசல் வழக்கு எண். 49/2013-இல் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலம் மற்றும் அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). உங்கள் தகப்பனார் உங்களுக்கு கிரயம் எழுதிக் கொடுத்துள்ள 07.12.2011 ஆம் தேதியிட்ட கிரைய ஆவணம் (வா.சா.ஆ.2) ஆவணத்தில் சொத்து விவரத்தில் காலிமனை என்று தான்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்து உங்கள் தகப்பனாருடன் பிறந்த அக்கா ராமு அம்மாள் என்பவருக்கு ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் காலி மனையாக முதலில் கொடுக்கப்பட்டு, அதன் பின்னர் அதில் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. மேற்படி ராமு அம்மாள் என்பவருக்கு காது கேட்காது மற்றும் அவரால் வாய் பேசவும் முடியாது. 31.01.1990 ஆம் தேதி மேற்படி ராமு அம்மாள் உங்களது தகப்பனார் ச.வேலாயுத பாண்டியன் என்பவருக்கு சொத்தை விற்பனை செய்வதற்காக ஒரு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்திருந்தார் என்றால் இல்லை. மேற்படி இடத்தை விற்பனை செய்வதற்காக உங்கள் தகப்பனார் சா.வேலாயுத பாண்டியன் என்பவர் லட்சுமண பாண்டியன் குமாரர் வேலாயுத பாண்டியன் என்பவருடன் ரூபாய் 22,500/-க்கு கிரயம் பேசி 05.01.1998 ஆம் தேதி ரூபாய் 5,000/-ம் கிரைய முன்தொகை பெற்றுக்கொண்டு ஒரு கிரைய ஒப்பந்தம் பிறப்பித்துக் கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாக்கித்தொகை ரூபாய் 17,500/- பணத்தை உங்கள் தகப்பனார் 15.02.1998 ஆம் தேதி பெற்றுக் கொண்டார் என்றால் தெரியாது. இது தொடர்பாக முதலில் நீங்கள் அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு காவல்துறையில் பிரதிவாதிகள் வழக்கு

சொத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக புகார் கொடுத்து விசாரணை நடந்தது என்றால் ஆமாம். அந்த விசாரணையில் உங்களையும், இந்த வழக்கின் மூன்றாவது பிரதிவாதி அப்பாக்குட்டி என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் காவல் நிலையத்தில் பதிவு செய்தார்கள் என்றால் ஆமாம். மேற்படி விசாரணையில் பிரதிவாதிகள் தரப்பில் உங்கள் தகப்பனார் முழுத்தொகையைப் பெற்றுக் கொண்டு சொத்தை லட்சுமண பாண்டியன் குமாரர் வேலாயுத பாண்டியன் வசம் ஒப்படைத்த ஆவணங்களை தாக்கல் செய்தார்கள் என்றும், அதை நீங்கள் பார்வையிட்டீர்கள் என்றால் அவர்கள் கொடுத்துள்ளார்கள். அதனை நான் பார்க்கவில்லை.

4. நீங்கள் ஏற்கனவே தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.49/2013 இல் உங்களை சாட்சியாக விசாரித்தார்கள் என்றால் ஆமாம். மேற்படி வழக்கில் 28.03.2018 ஆம் தேதி உங்களது குறுக்கு விசாரணையின் போது "... வாக்குமூலத்தில் எனது தந்தையார் பணம் பெற்றிருந்ததை காண்பிக்க ஆதாரம் காண்பித்தால் தாவா சொத்திற்கு பதிலாக வேறு 3 சென்ட் நிலம் தருவதாக கூறினேன். பிரதிவாதிகள் என் தகப்பனார் எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம், கிரைய ஒப்பந்தம் ஆகியவற்றை காவல் நிலையத்தில் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். பிராது தபசில் சொத்தினை

சொத்தின் அனுபவத்தினை மீட்க நான் இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கூறவில்லை என்றால் சரிதான்…” என்று சாட்சியமளித்துள்ளீர்கள் என்றால் ஆமாம். உங்கள் தகப்பனார் ராமு அம்மாள் என்பவரின் பொது அதிகார முகவர் என்ற நிலையில் 05.01.1998 ஆம் தேதி கிரைய ஒப்பந்தம் செய்து கிரைய தொகை முழுவதையும் பெற்று விட்டு வழக்கு சொத்தின் அனுபவத்தை லட்சுமண பாண்டியன் குமாரர் வேலாயுத பாண்டியன் வசம் ஒப்படைத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அனுபவம் எங்களிடம் தான் இருந்தது. 15.02.1998 ஆம் தேதி முதல் வழக்கு சொத்தின் அனுபவம் லட்சுமண பாண்டியன் குமாரர் வேலாயுத பாண்டியன் வசம் தான் இருந்தது என்றால் சரியல்ல.

5. ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் மேற்படி இடம் வழங்கப்பட்டதால், பத்திரம் பதிவு செய்ய முடியாது என்பதால்தான், பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. லட்சுமண பாண்டியன் குமாரர் வேலாயுத பாண்டியன் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரது வாரிசுகள் சௌந்தர பாண்டியன், ஜோதி ராஜன், கனி, சீனி பாண்டியன் மற்றும் மனைவி சின்னதாய் ஆகியோர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.49/2013 இல் உங்களை குறுக்கு

விசாரணை செய்த போது 28.03.2018 ஆம் தேதி உங்களது குறுக்கு விசாரணையின் போது மேற்படி நபர்கள் வாரிசுகள் என்பதை ஒப்புக்கொண்டு உள்ளீர்கள் என்றால் ஆமாம். அதை கேள்விப்பட்டு சொல்லியுள்ளேன். லட்சுமண பாண்டியன் குமாரர் வேலாயுத பாண்டியன்தான் அனுபவம் செய்து வந்தார் என்றும், அவரது ஆயுளுக்கு பின்னர் வாரிசு அடிப்படையில் சவுந்தரபாண்டியன் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. எங்களுடைய அனுபவத்தில் தான் இருந்தது. இந்த வழக்கின் ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகள் இருவரும் மேற்படி சௌந்தர பாண்டியனின் மனைவிகள் என்றால் சரிதான். மேற்படி நபர்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்று பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி நபர்களின் பிள்ளைகளை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றும், அதனால், வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

6. சௌந்தர பாண்டியன் சொத்தை பெற்ற பின்னர் வீட்டை பராமரித்து ஆஸ்பெட்டாஸ் சீட்டு போட்டு அவரை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. அதன் பின்னர் அவருடைய வாரிசுகள் சொத்தை முழு

உரிமையாளர் அடிப்படையில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து நீங்கள் கேட்டுள்ள உரிமை காலவரையறை சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளுக்கு வழக்குரை தபசில் சொத்தில் எதிரிடை அனுபவம் ஏற்பட்டு அதன் அடிப்படையில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளார்கள். அதனால், அவர்களுக்கு உரிமை கிடையாது. ஏற்கனவே நீங்கள் தாக்கல் செய்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு முரணாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால், இந்த வழக்கு முன் தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் நீங்கள் முதலில் அசல் வழக்கு தாக்கல் செய்த போது உங்களுக்கு இருந்தது என்றும், ஆனால், நீங்கள் அவ்வாறு கேட்காமல் தனியாக இரண்டாவதாக வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால், நீங்கள் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

SUNIL RAJA MAHALINGAM Digitally signed by SUNIL RAJA MAHALINGAM Date: 2025.02.13 13:37:35 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai